**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், சங்கரன்கோவில்**

**முன்னிலை : செல்வி. G.பவித்ரா, L.L.M.,**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, சங்கரன்கோவில்.**

**நீதித்துறை நடுவர், சங்கரன்கோவில் (மு.கூ.பொ)**

Cr.M.P.No. 286/2026

புளியங்குடி வனச்சரகம் காவல் நிலைய குற்ற எண்.WLOR 3/2026

பிரிவுகள் 39, 42, 44, 48, 49(a)(b)(c), 52, 56, 57

வனஉயிரின பாதுகாப்புச் சட்டம் 1972, திருத்திய வன சட்டம் 2022

உத்தரவு நாள்: 05.03.2026

CNR No. TNTS09-000608-2026

இளையரசன்,
த/பெ.கொம்பையா

... மனுதாரர்/எதிரி

/எதிர்/

வனச்சரக அலுவலர்
புளியங்குடி சரகம்,
புளியங்குடி.

... எதிர்மனுதாரர்/வாதி

மனுநாள்: 27.02.2026, மனு 480 BNSS

இரு தரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. அரசு தரப்பு பதில் பெறப்பட்டது.

2. மனுதாரர்/எதிரி தரப்பில், மனுதாரர்/எதிரி 22.02.2026 முதல் காவலில் இருந்து வருவதாகவும், அவர் மீது பொய் வழக்கு போடப்பட்டுள்ளதாகவும், அவர் கூலி வேலை செய்து வருபவர் என்றும், அவர் நிரந்த முகவரி உடையவர் என்றும், அவர் நீதிமன்ற நிபந்தனைக்கு கட்டுப்படுவார் என்றும், எதிரியை பிணையில் விடுவிக்கும்பட்சத்தில் தகுந்த பிணையதாரர்களை வழங்குவதாகவும், எனவே மனுதாரர்/எதிரியை பிணையில் விடுவிக்க உத்தரவிட வேண்டுவதாக எடுத்துரைக்கப்பட்டது. எனவே மனுதாரர்/எதிரியை பிணையில் விடுவிக்க உத்தரவிட வேண்டுவதாக எடுத்துரைக்கப்பட்டது.

3. அரசு தரப்பில், எதிரி அவரது மாமனார் வீட்டில் சுமார் 200 லிட்டர் கொள்ளளவு கொண்ட நீலநிற பிளாஸ்டிக் தண்ணீர் டிரம்மில் சுமார் 20 கிலோ மணல் நிரப்பப்பட்டு அதில் மண்ணுளி பாம்பை பதுக்கி வைத்திருப்பது தெரிய வந்து, அவரை பிடித்த வனத்துறையினர் அங்கிருந்து உயிருடன் மண்ணுளி பாம்பு மற்றும் அதை பதுக்கி வைக்க உபயோகப்படுத்திய சுமார் 200 லிட்டர் கொள்ளளவு கொண்ட நீலநிற பிளாஸ்டிக் தண்ணீர் டிரம்மற்றும் அதில் நிரப்பப்பட்ட சுமார் 20 கிலோ மணல், உரச்சாக்கு,Vivo Y 19 Silver Color Mobile கைப்பற்றப்பட்டு

வனச்சரக அலவலகத்திற்கு வரவழைக்கப்பட்டு, விசாரித்ததில் மேற்படி எதிரி 21.02.2026-ம் தேதி மாலை சுமார் 03.00 மணியளவில் மக்காச்சோளம் எடுக்க செல்லும்போது உயிருள்ள மண்ணுளி பாம்பை பார்த்தபோது அந்த மண்ணுளி பாம்பு அதிக விலைக்கு விற்பனையாகும் என்று சேகரம் செய்ய வைத்திருந்த உரச்சாக்குப்பையில் போட்டு வீட்டிற்குக் கொண்டு சென்று அதனை வீட்டில் இருந்த நீலநிற பிளாஸ்டிக் தண்ணீர் டிரம்மில் மணல் நிரப்பி அதில் உயிருள்ள மண்ணுளி பாம்பை போட்டு மூடி வைத்திருந்தால் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், மேலும், இவ்வழக்கு விசாரணை முழுமையாக முடிவடையாததாலும், இவ்வழக்கு தொடர்புடைய குற்றவாளிகள் மேலும் இருப்பதாக சந்தேகிக்கப்படுவதாலும், 1-வது எதிரிக்கு ஜாமீன் வழங்கினால் சாட்சிகளையும், ஆதாரங்களையும் கலைக்க வாய்ப்புள்ளதாலும், எதிரியை ஜாமீன் வெளிவருவதற்கு ஆட்சேபனைணை தெரிவிப்பதாக எடுத்துரைக்கப்பட்டது.

4. இரு தரப்பும் கேட்கப்பட்டன. வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. வழக்கு ஆவணங்களை பரிசீலிக்கப்பட்டதில், மனுதாரர்/எதிரியானவர் 12 நாட்களாக காவலில் இருந்து வருகிறார் என்று தெரிய வருகிறது. இவ்வழக்கு சொத்து கைப்பற்றப்பட்டுவிட்டதாக எதிர்மனுதாரர் தரப்பில் தெரிவிக்கப்பட்டதைக் கருத்தில் கொண்டும், இவ்வழக்கின் எதிரி புலன் விசாரணைக்கு ஒத்துழைப்பு தருவார் என்று கருதியும், மேலும், எதிரியை பிணையில் விடுவது எந்த விதத்திலும் அரசு தரப்பு வழக்கை பாதிக்காது என்று கருதியும், இந்த வழக்கின் தன்மை மற்றும் நீதியின் நலனைக் கருத்தில் கொண்டு மனுதாரர்/எதிரியை பிணையில் கீழ்க்கண்ட நிபந்தனைகளின் பேரில் விடுவிக்க இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

நிபந்தனைகள் :-

1. மனுதாரர்/எதிரி தானும், தனி இரு நபர்களும் தலா ரூ.10,000/-த்திற்கு பிணைப்பத்திரம் இயற்றித் தரவேண்டும். மேற்குறிப்பிட்ட இரு நபர்களுள் ஒருவரேனும் சங்கரன்கோவில் நீதித்துறை நடுவர் நீதிமன்ற அதிகார வரம்பிற்குள் நிரந்தர வசிப்பிடம் கொண்டவராக இருக்க வேண்டும்.
2. மனுதாரர் / எதிரி புலன் விசாரணைக்கு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும்.
3. மனுதாரர் / எதிரி பிணையில் வெளிவந்த பிறகு சங்கரன்கோவில் தாலுகா காவல் நிலையத்தில் காலை 10.00 மணி ஆஜராகி 45 நாட்களுக்கு தொடர்ந்து கையொப்பமிட வேண்டும்.

PAVITHRA G

Digitally signed by PAVITHRA G
Date: 2026.03.05 17:43:30 +0530

நீதித்துறை நடுவர், (மு.கூ.பொ),
சங்கரன்கோவில்.